செ.வெ.எண்: 03 நாள்: 01.11.2021

**பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 138 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (01.11.2021) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 138 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

**அதன் விபரம் பின்வருமாறு:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கொரோனா தொற்று நோய் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 04.10.2021 முதல் நடைபெற்று வருகிறது. அதன்படி இன்று நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்கள் அளிக்க வந்த பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைபிடித்தும், முகக் கவசம் அணிந்து வந்தும் மனு அளித்தனர்.

பொதுமக்கள் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, தொழில் தொடங்க கடனுதவி, வீட்டுமனைப்பட்டா, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, பட்டாகோருதல், பட்டா மாறுதல், கல்விக்கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 138 மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் மனுக்கள் குறித்த விவரங்களை கேட்டறிந்து குறித்த காலத்திற்குள் மனுக்களின் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு, மனுதாரருக்கு உரிய பதிலை அளிக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் இரண்டு பெண் குழந்தைகள் திட்டத்தின் கீழ் தலா ரூ.50,000 வீதம் 20 பெற்றோர்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கான வைப்பு நிதி காசோலையினையும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்களினை பரிசீலணை செய்து 4 நபர்களுக்கு இலவச தையல் இயந்திரத்தனையும், மாற்றுத்திறனாளிகள் லலத்துறையின் மூலம் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்திற்குட்பட்ட ஆண்டிக்குரும்கலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.மருதமுத்து என்ற மாற்றுத்திறனாளிக்கு விலையில்லா மூன்று சக்கர வாகனத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, தகுதியான அனைவருக்கும் அரசின் நலத்திட்டங்கள் விரைவாக சென்றடையுமாறு பணியாற்றிட வேண்டும் என்று அரசுத்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி நா.அங்கையற்கண்ணி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திருமதி அ. லலிதா, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலர் திருமதி ரவிபாலா, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) திரு.ம.பாரதிதாசன், தனித்துணை ஆட்சியர்(சபாதி) திரு.எஸ்.சரவணன் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.